

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.9.2023) எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் உள்ளனர்.

## சென்னையில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப்.11-

கோவை மற்றும் நீலகிரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னைவானிலை ஆய்வுமையம்வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி,மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நூறு ஆண்டுகள் கடந்தும் வாழ

# அண்ணன் ஆர்.எம்.வீ.யை நெஞ்சார வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, செப்.11-**

**“நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருப்பதாவது:-

எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவற்ற மதிப்பும், அன்பும் கொண்ட வருமான அண்ணன் ஆர்.எம்.வீரப்பன் அவர்களுக்கு 98ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்!

நம் பாசத்திற்குரிய ஆர்.எம்.வீ. அவர்கள் நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.



புதுடெல்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டினையொட்டி குடியரசுத் தலைவர் அளிக்கவுள்ள விருந்தில் அழைப்பின்பேரில் கலந்து கொள்வதற்காக புதுடெல்லிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.9.2023) விமான நிலையத்தில், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வரவேற்றனர்.



திருச்சியில் 55வது வார்டுக்கு உட்பட்ட ஆலங்குளம் பகுதியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு ரூ.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடத்தை மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், கதிரவன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்டச் செயலாளர் வைரமணி, டோல்கேட் சுப்பிரமணி, சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, பகுதிச் செயலாளர் மோகன் தாஸ், கோட்ட தலைவர் விஜயலட்சுமி கண்ணன், கவுன்சிலர் காஜாமலை, விஜி ராமதாஸ், கிராப்பட்டி செல்வம், புஷ்பராஜ், பந்தல் ராமு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


